விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka ★★

# ஈழநாடு

மலர் 16 The Eelanaadu இதழ் 118

யாழ்ப்பாணம் வைகாசி 28 ஐ. அவ். 19 செவ்வாய்க்கிழமை 11-6-74

11 JUN 1974

## சமசமாஜிகள் கை ஓங்கியது!

### அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தில்

யாழ்ப்பாணம், செவ்.

அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையின் பொதுக் கூட்டமும் உதகியோகத்தர் தெரிவும் நேற்று மாலை யாழ். வை. எம். ஸி. ஏ. மண்டபத்தில் மிகவும்பரபரப்பான சூழ்நிலையில் நடைபெற்றது. மாஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சிக்கிடையிலும லங்கா சமசமாஜக் கட்சிக்கிடையிலும் நடைபெற்ற உததியோகத்தர்கள் தெரிவுப் போட்டியில் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர்களே தெரிவு செய்யப்பட்டனர். இதன்மூலம் கடந்த இரண்டு வருடகாலமாக கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவந்த அரசாங்கலிகிதர் சேவைச் சங்க யாழ். கிளையை மீண்டும் லங்கா சமசமாஜக்கட்சி தனது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்துள்ளது.

முக்கிய பதவிகள் அனைத்தையும் லங்கா சமசமாஜக் கட்சி கைப்பற்றிக்கொண்டது.

பதில் தலைவர் திரு. பி. எச். தனராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

நெருக்கடியான கட்டங்கள் ஏற்பட்டபோது அவர் நிலைமையை லாவகமாகச் சமாளித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முன்னள் உதவிச் செயலாளர் திரு. சிவசுப்பிரமணியம் பேசுகையில் நாட்டில் பாஸிஸசக்தி தலையெடுக்குமானல் எமது உரிமைகள் பறிபோவதுடன் உரிமைகளையும் வென்றெடுக்க முடியாது பின்தள்ளப்பட்டு விடுவோம் என்றார்.

இனங்களுக்கிடையே அதிருப்தியை வளர்ப்பதன் மூலம் சோஷலிஸத்தை அடைய முடியாது என்றும் திரு. சிவசுப்பிரமணியம் சொன்னர்.

லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு வி. பொன்னம்பலம் பேசுகையில் வாழ்க்கைச் செலவு உயர்வு, சுரண்டல், தேசிய செல்வத்தைச் சமமாகப் பங்கிட நட

(4-ம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் அதிகாரிக்கு

# 10 வருட கடூழியச் சிறை!

காலி, திங்கள்

உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு இன்று காலி மேல்நீதிமன்றத்தில் பத்துவருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பதினெட்டுவயது இளம் பெண்ணைக் கைததுப்பாக்கி முனையில் மிரட்டிக்கற்பழித்ததாக இந்தப் பொலிஸ் அதிகாரிமீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

அழுனுகமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் அபயசிங்கா வீரக்கூன் பிரான்ஸிஸ்கோமஸ் என்ற 28 வயதான பொலிஸ் அதிகாரி கடந்த வருடம் ஜனவரி மாதம் 31-ந் தேதி துல்யதுரநுடுவாவதி என்ற இளம் பெணணைக் கற்பளித்ததாகக் குற்றஞ்சாட்டி இவ் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

எதிரிகுற்றவாளிஎன ஜூரிகள் ஏகமனதாக முடிவு தெரிவித்தனர்.

எதிரிக்கு பத்துவருடக் கடூழியச் சிறைததண்டனை விதிதது தீர்ப்பளிக்கையில் நீதிபதி சிசில் என். குணவர்த்தன எதிரியைப் பார்த்து "நீர் உமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததுடன் உமது பொலிஸ்சேவையையும் அவமானப்படுத்தியிருக்கிறீர்" என்றார்.

கருணைகாட்டுமாறு வழக்கறிஞர் விடுத்தகோரிக்கையையும் நீதிபதி நிராகரித்தார்.

## குளொஸ்டர் கோமகன் காலமானர்

லண்டன், ஜூன் 10

குளொஸ்டர் கோமகன் இன்று காலமானர். அவருக்கு வயது 74.

1948ம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட சமயம் பிரிட்டிஷ் மன்னரின் சார்பில் அவர் இலங்கை வந்து சுதந்திரம் வழங்கும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

## இலங்கைஇஸ்லாமியஎழுத்தாளருக்கு ஆயிரம் ரூபாய் பரிசு

சென்னை, ஜூன் 10

இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாடு இன்று முடிவடைந்தது.

மாநாட்டில் இஸ்லாமிய தமிழ் எழுத்தாளர்கள் பலருக்கு தலா ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்பட்டது. பரிசு பெற்றவர்களில் ஒருவர் இலங்கையைச் சேர்ந்தவர் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தப் பரிசுகளை சீதக்காதி டிரஸ்ட் வழங்கியது. மாநாடு ஜனுப் அப்துல்சமத் தலைமையில் நடைபெற்றது. சிறந்த நூல்களை எழுதும் இஸ்லாமிய எழுத்தாளர்களுக்கு பரிசுகளைவழங்க சீதக்காதி டிரஸ்ட் முன்வந்திருக்கும் தகவலை ஜனப் அப்துல்சமத் வெளியிட்டார்.

......

## டெஸ்ட் கிரிக்கெட்: ஏட்றிச் மீண்டும் 'செஞ்சறி'

லண்டன், யூன் 10

இங்கிலாந்துக்கும், இந்தியாவுக்குமிடையில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 4-வது நாள் தேநீர் இடைவேளையின் போது, இங்கிலாந்துக் கோஷ்டி 3 விக்கெட் நஷ்டத்துக்கு 213 ஓட்டங்களைப் பெற்றது. எட்றிச் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களையும், காப்டன் டைமக் டெனிஸ் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

எட்றிச் முதல் இன்னிங்ஸிலும் ஆட்டமிழக்காமல 128 ஓட்டங்களைப் பெற்றவர்.

## பாபா கருத்து கிளப்பிய பிரச்னை

கொழும்பு, திங்கள்

ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் அற்புதங்கள் பற்றி இலங்கையிலுள்ள உதவி இந்திய ஹைகமிஷனரும் அவரது மனைவியும் தெரிவித்ததாக ஓர் ஆங்கில வாரப்பத்திரிகையில் வெளிவந்த கருத்துக்களை சிலர் ஆட்சேபித்து அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். இது ஒரு பிரச்னையையே அரசியல் சமய, ராஜீய வட்டாரங்களில் கிளப்பியிருக்கிறது. (சி.பி.ஏ)

## ஐ. நா.வில் பங்ளாதேஷ்

நியுயோர்க், ஜூன் 10

ஐ. நா. [illegible] அங்கத்துவ நாடாகச் சேருவதற்கு பாதுகாப்புச்சபை எதிர்ப்பின்றி அங்கிகாரமளித்து விட்டது

## பரீட்சைரத்து

பிரான்ஸ் நடத்தவிருந்த அணுஆயுதபரீட்சை பொருளாதாரம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

......

## ஷேக்—சுவர்ண் பேச்சுவார்த்தை

புதுடில்லி, ஜூன் 10

காஷ்மீர் சிங்கம் என அழைக்கப்படும் காஷ்மீர் முன்னள் பிரதமர் ஷேக் அப்துல்லாவுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் சர்தார் சுவர்ண்சிங் இன்றும் நேற்றும் காஷ்மீரின் எதிர்காலம் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர். விபரங்கள் வெளியிடப்படவில்லை.

## "செய்யும் தொழிலுக்கு விசுவாசம் உள்ளவர்கள்"

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழர்கள் எந்த அரசாங்கத்தின்கீழ் வேலை செய்தாலும் எந்த முதலாளியின்கீழ் வேலை செய்தாலும் அவர்கள் விசுவாசமாக வேலைசெய்வார்கள். மலாயாவில் என்றாலும் பர்மாவில் என்றாலும் அவர்கள் இப்படியே நடந்தார்கள். அந்த நன்றியை அந்த நாட்டு அரசாங்கங்களும் மறக்கவில்லை' என்று யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. கெ.முருகேசம்பிள்ளை மலாயா-இலங்கையர் சங்கம் இலங்கையிலுள்ள மலேஷிய தூதுவர் தெங்குஇந்திரா பெற்றூவுக்கும் திருமதி பெற்றூவுக்கும் யாழ்ப்பாணம் பாம் கோர்ட்டில் நேற்று முன்தினம் அளித்த நண்பகல் விருந்துபசாரத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மலேஷியாவுக்கு யாழ்ப்பாணத்தமிழர்கள் சென்ற பின்னர்தான் யாழ்ப்பாணம் பொருளாதாரச் செழிப்புப் பெற்றதென்றும் இன்னும் சிலபகுதிகளில் கட்டிடங்களை பார்த்தவுடனேயே அந்த வீட்டுக்காரர்களுக்கும் மலேசியாவுக்கும் தொடர்பிருக்கிற தென்பதைச் சுலபமாகச் சொல்லிவிடலாமென்றும் திரு. முருகேசம்பிள்ளை சொன்னர்.

செல்வி புஷ்பா செல்வநாயகம் பேசுகையில் திரைகடலோடியுந்திரவியந்தேடு என்ற பழைய பாடலின் படி தமிழர்கள் வெளிநாடு சென்றார்களென்றும் மலேயாவுக்கும் யாழ்ப்பாணததுக்குமிடையில் பல விஷயங்களிலும் ஒருமைப்பாடுள்ளதென்றும் கூறினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## இன்று கடற்றொழில் மாநாடு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடற்றொழிலை விருத்திசெய்வதற்கான முக்கியதிட்டங்கள் பற்றி ஆலோசனை செய்வதற்காக இன்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மகாநாடு நடைபெறவிருக்கிறது.

கடற்றொழிலாளர் வீட்டுவசதி, கடற்றொழிலாளர் காப்புறுதித் திட்டம், வலைத் திருட்டுப் பிரச்னைகள், மீன்பிடி உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டம் ஆகிய பல அம்சங்கள் இன்றைய மகாநாட்டில் ஆராயப்படவிருப்பதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# "சிங்கள - தமிழ் ஐக்கியமே நாட்டை முன்னேற்றும்"

பருத்தித்துறை, திங்கள்

"சிங்கள-தமிழ் மக்களின் ஐக்கியம் ஏற்பட்டால் மட்டுமே இந்நாட்டின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த முடியும். அரசியல் கட்சிகளுக்குள் ஏற்படும் ஒப்பந்தங்கள் மூலம் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. இலங்கை தேசிய ஆசிரியர் சங்கம் இன ரீதியிலான ஒற்றுமைக்குப் போராடி வருகிறது"

இவ்வாறு இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. [illegible] நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வடமாகாண ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றியபோது குறிப்பிட்டார். திரு. என். எஸ். இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பொன்னுத்தோமேலும் குறிப்பிட்டதாவது:

"பிறதொழிற்சங்கங்களுடன் ஒப்பிட்டு நோக்குமிடதது ஆசிரியர் தொழிற்சங்கங்களின் வளர்ச்சி திருப்திகரமாகவில்லை. காரணம் பதவிக்கு வருபவர்கள் சுயநல நோக்குடன் நடந்துகொள்வதாகும். ஆனல் எமது சங்கம் அவ்வித சுயநலவாதிகளை அகற்றிவிட்டது. ஆசிரியரின் இடமாற்றங்கள் முக்கியமான கடமையல்ல. ஆசிரியரின் அடிப்படைப் பிரச்னைகள் சுமுகமாகத் தீர்க்கப்படவில்லை. தீர்க்கப்பட்டால் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கல்விக்கந்தோர்களுக்கு படையெடுக்கவேண்டியதில்லை. பிராந்திய ஆசிரியர் இடமாற்றச் சபைகள் சரிவர இயங்காததன் காரணமாக உததியோகததரே தான்தோன்றித்தனமாக ஆசிரியர் இடமாற்றங்களைச் செய்யும் பரிதாப நிலைமை உருவாகியுள்ளது"

செயலாளர் திரு. ச. கி. சுந்தரலிங்கம் நன்றி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தி (சங்கானை)
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர். — பத்மினி
மன்னாதி மன்னன்

நாகம்மாஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப 2-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
அன்னமிட்டகை

ஸ்ரீ கிருஷ்ணா
[பண்டத்தரிப்பு]
தினசரி 6-30, இரவு 9-30
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
தேனும் பாலும்

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
கோபலு ஹண்ட
(சிங்களப் படம்)
45 நிமிடங்களுக்கு
சீன சர்க்கஸும்
காண்பிக்கப்படும்

RIO (Town Hall)
Jaffna
Daily 10-30, 4-45
7-15 and -945,
Telly Savalas
Clint Walker
PANCHO VILLA

REGAL Jaffna
Daily 4-45, 7-00, 9-30pm
Terrence Stamp
in
THE MIND OF
Mr. SOAMES
(Color)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ் .... காஞ்சனா .... ரவிச்சந்திரன் நடித்த
உத்தரவின்றி உள்ளே வா

ராஜா கடைசி வாரம்
(யாழ்ப்பாணம்) சிவாஜி-எஸ்.எஸ்.ஆர்.
காலை 10-30, 2-30 மாலை 6-30, இரவு 9-45 நடித்த
மனோகரா

ராணி சினிமா ஜெய்சங்கர் - ஏ.வி.எம். ராஜன்
[யாழ்ப்பாணம்] மேஜர் சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
அன்புச் சகோதரர்கள்
சென்னையில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய சித்திரம்

அநேக ரஸிகப்பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க நீடிக்கப்பட்டுள்ளது.
ஸ்ரீதர் சினிமா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
த பொடி THE BODY
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி
பி. ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, சனி, ஞாயிறு
காலை 10-30
இது ஒரு வழக்கமான கதை அல்ல.
முற்றிலும் மாறுபட்ட கதை.
தனக்குரிய மனைவியை, தான் அடையவேண்டிய
அன்புச் செல்வத்தை தேடிப் புறப்படும்
ஒரு கோடீஸ்வரனின் கதை
ஆறு குணங்கள் கொண்டவளாம் ஒரு பாவை
அது யாரோ எவரோ — அவள்தான்......
ராமன் தேடிய சீதை
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார் - அசோகன் - நாகேஷ் - மனோரமா
டைரக்ஷன்: ப. நீலகண்டன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

கடைசி வாரம்
லிடோ [யாழ்ப்பாணம்]
தினசரி
காலை 10-00, பி. ப. 2-00,
மாலை 6-00, இரவு 9-00
முத்துராமன் - ஜெயலலிதா
சூரியகாந்தி

உலகின் எந்தப் பகுதியிலும்

# ஆதிக்கம் செலுத்துவது அமெரிக்காவின் நோக்கமில்லையாம்!

## மேற்காசிய புறப்படுமுன் நிக்ஸன் விடுத்த செய்தி

வாஷிங்டன், ஜூன் 10
'உலகின் எந்தப் பகுதியிலும் ஆதிக்கம் செலுத்துவது அமெரிக்காவின் நோக்கம் அல்ல. ஒவ்வொரு நாடும் தத்தம் எல்லைகளுக்குள் சுதந்திரத்துடனும் பாதுகாப்புடனும் இருக்கவேண்டும் என்பதே அமெரிக்காவின் விருப்பம் இவற்றிற்கெல்லாம் உத்தரவாதம் அளிப்பதே எமது நோக்கம்'

அமெரிக்க அதிபர் நிக்ஸன் இன்று மேற்காஸியவிஜயத்தை மேற்கொண்டு வாஷிங்டனில் இருந்து புறப்படுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமது மேற்காஸிய பயணம் மிகவும் முக்கியமானது என்று கூறிய நிக்ஸன், மேற்காசியாவில் அமைதியுகம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்காகவேதாம் இப்பயணத்தை மேற்கொண்டிருப்பதாகக் கூறினார்.

6 நாள் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் இவர், எகிப்து, சிரியா, சவூதிஅரேபியா, இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்வார்.

1944ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ரூஸ்வேல்ட்டுக்குப் பின்னர் எகிப்துக்குச் செல்லும் முதலாவது ஜனாதிபதி திரு. நிக்ஸனாகும்.

## மீண்டும் ராஜிய உறவுகள்

மாஸ்கோ, ஜூன் 10
சோவியத்ரஷ்யா விரைவில் புதிய போர்த்துக்கல் அரசுடன் ராஜிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளவிருக்கிறது. இதற்கான உடன்பாடு அண்மையில் இருநாடுகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ளது.

ஆபிரிக்காவில் காலனி ஆட்சியை விலக்குவதென்று அண்மையில் லண்டனில் வைத்து போர்த்துக்கல் வெளியுறவு அமைச்சர் டாக்டர் சோரஸ் ரஷ்ய அதிகாரிகளுக்கு உறுதிஅளித்ததை அடுத்தே இருநாட்டு அதிகாரிகளுக்கும் உடன்பாடு ஏற்பட்டது.

ரயில்வே வேலை நிறுத்தம்:

# சிறையிலுள்ள ஊழியர்களை விடுதலை செய்யக்கோரிக்கை

புதுடில்லி, ஜூன் 10
அண்மையில் நடைபெற்ற இந்திய ரயில்வே ஊழியர் வேலைநிறுத்தம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட ஊழியர்களையும் மற்றவர்களையும் உடன் விடுதலை செய்யுமாறு அகில இந்திய தொழிற் சங்கத்தலைவர் திரு. பெர்னாண்டஸ் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

இவர்களை விடுதலை செய்யுமாறு மாநில அரசாங்கங்களுக்கும் திரு. பெர்னாண்டஸ் கடிதம் எழுதியுள்ளார்.

இவர்கள்மீதான வழக்குகளை நீக்குமாறும் அவர் தமது வேண்டுகோளில் கேட்டுள்ளார்.

## அச்சுதமேனன் செக். பயணம்

புதுடில்லி, ஜூன் 10
கேரள முதல் அமைச்சர் திரு. அச்சுதமேனன் இம்மாதம் செக்கோஸ்லாவியாவுக்குப் புறப்படுகிறார்.

உடல்நலம் குன்றியிருக்கும் இவர் அங்கு சிகிச்சை பெற்றுத் திரும்புவார்.

பசுபிக் அணுசோதனை:

# பிரான்ஸ் சீர்திருத்த மந்திரி பதவி நீக்கம்!

பாரிஸ், ஜூன் 10
பசுபிக்கில் பிரான்ஸ் அணுசோதனையைத் தொடர்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பிரான்ஸின் சீர்திருத்த மந்திரி திரு.ஜாக்கஸ், அதிபரினால் பதவிநீக்கம்செய்யப்பட்டுள்ளார்.

பிரான்ஸ் அதிபர் திரு. வலரி இஸ்கார்ட் டெஸ்டாய்ங் இவ்விவகாரம் தொடர்பாக பிரதமர் திரு. சிராக்குடன் சுமார் 90 நிமிட நேரம் ஆலோசனை நடத்திய பின்னர் ஜாக்கஸை பதவி நீக்கம்செய்தார்.

பிரான்சின் அணுசோதனையைத் தாம் முன்னரும் எதிர்த்து வந்ததாகவும் தொடர்ந்து கண்டிக்கப் போவதாகவும் திரு ஜாக்கஸ் தெரிவித்தார்.

பிரான்சின் முதலாவது அணுகுண்டு பரிசோதனையைக் கண்டித்த திரு ஜாக்கஸ், ஒரு குழுவுக்குத் தலைமைதாங்கி சோதனை நடைபெற்ற இடத்திற்குச் சென்று பார்வையிட்டார்.

## தென் ஆபிரிக்கா அணுகுண்டு தயாரிக்கும்?

பிராங்பர்ட், ஜூன் 10
''ஐ. நா. தர்மகர்த்தா பிரதேசமான நெமிபியாவிலுள்ள யுரேனியம் முழுவதையும் தென்னாபிரிக்க அரசு சட்டவிரோதமாக சுரண்டிக் கொண்டு போகிறது'' என்று தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் ஸ்தாபனத்தின் லண்டன் பிரதிநிதி திரு. கஜாலிமி இங்கு கூறினார்.

தென்னாபிரிக்கா இந்த யுரேனியத்தால் அண்மையில் அணுகுண்டு செய்ய விருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். (ஏ. டி. என்.)

# இஸ்ரேலும், சிரியாவும் பரஸ்பரம் குற்றச்சாட்டு

டெல்அவிவ், ஜூன் 10
சிரியாவில் இஸ்ரேலிய போர்க்கைதிகள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது.

இஸ்ரேல் தகவல்அமைச்சர் ஜறீல் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளார்.

இக் குற்றச்சாட்டுக்கு மறுப்புத் தெரிவித்த சிரிய அதிகாரிகள், சிரிய போர்க்கைதிகள் இஸ்ரேலில் படுமோசமான நிலையில் துன்புறுத்தப்படுகிறார்கள் என்றும் தமது தவறை மறைக்கவே இஸ்ரேல், சிரியா மீது குற்றம் சுமத்துகிறது என்றும் தெரிவித்தனர்.

## சம்பளம் வழங்குமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், செவ்.
யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரி ஒன்றின் மாணவர் விடுதியில் வேலைசெய்த தொழிலாளரான வி. பெருமாள் என்பவரை வேலைநீக்கம் செய்ததற்கெதிராக தொழில்கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டவழக்கில் அத் தொழிலாளருக்கு அவர்வேலை செய்த ஒவ்வொரு வருடத்துக்கும் அரைமாத சம்பளம் வீதம் கணக்கிட்டு அவருக்கு சேவைக்காலச் சம்பளமாக கொடுக்கும்படியாழ்ப்பாணத்தில் நடந்த தொழில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்த வழக்கில் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. எஸ். தியாகராசா ஆஜராகியிருந்தார்.

# இளம்பெண்ணுடன் வாலிபர் கைது!

சரவெட்டி, ஞாயிறு
நெல்லியடிப் பகுதியில் பெருப்புள்ளிகளால் இரவு ராணிகள் விடுதியொன்று நடத்தப்படுகிறதா என ஒரு சந்தேகம் நெல்லியடிப் பொலிசாருக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்து இவ்விடுதிகளில் வதியும் இரவு ராணிகள் மீது பொலிசார் வலைவிரித்தனர்.

இதன் விளைவாக நேற்றைய தினம் ஒரு பதினெட்டு வயதுப் பெண்ணையும் இளைஞர் ஒருவரையும் தகாத முறையில் ஈடுபட்டிருந்த போது நெல்லியடி பொலிசார் கைது செய்தனராம்.

வாலிபரையும் இவ்விளம் மங்கையையும் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. சி. எம். தர்மலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தபோது விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார். விசாரணை தொடர்கிறது. இதில் சம்பந்தப்பட்ட வேறு சிலரையும் பொலிசார் தேடுகின்றனர். ...... (ஈ)

## யாருடைய சைக்கிள் இது?

கரவெட்டி, திங்கள்
திருடிய சைக்கிளுடன் தமது சொந்த ஊருக்கு கம்பி நீட்ட முயன்ற வாலிபன் ஒருவரை பொதுமக்கள் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர். நெல்லியடியில் இச்சம்பவம் நடந்தது.

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் சைக்கிள் வைக்கப்பட்டுள்ளது. இதுவரை இச் [illegible] வில்லை.

## வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்
கோண்டாவில் கிழக்கு ஆசிமட [illegible] விநாயகர்கோவில் சித்திரத் தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ஈ)

## செய்யும்—

(-2ம் பக்கத் தொடர்ச்சி)

மலேஷிய தூதுவர் தெங்கு இந்திரா பெற்று பேசுகையில் யாழ்ப்பாணத்துக்கு எப்போதோ வந்திருக்க வேண்டுமென்றும் அதற்குவசதியில்லாதுபோய்விட்ட தென்றும் குறிப்பிட்டுதமக்கு அளிக்கப்பட்டவரவேற்புக்கு நன்றி தெரிவித்தார்.

பாகிஸ்தான்

# இந்தியபே... பிரி...

லண்டன், ஜூ...
இந்தியாவுடனா... அரசுமுறையிலான... களை கைவிட்டுவிடு... பாகிஸ்தானின் முடிவு... பிரிட்டிஷ் வெளிறவு... அமைச்சர் கவலை... துள்ளார்.

பாகிஸ்தான் இப்பே... நிறுத்திவிடுவதனால்... எது விதத்திலும் பா... படப் போவதில்லை... தெரிவித்த அவர்,

## "அவர்... எமக்க...

மாவிட்டபுரம்,...
'பெரும்பான்மையி... சிங்கள இனத்தின்... கைகளையே நிறைவே... யாத அரசாங்கம் எம... எமகளை வழங்கும் எ... பார்க்கமுடியாது.'

இவ்வாறு அளவெட்... ளக்கிரி முத்துமாரி... ஆலய முன்றலில்... காசி ஆனந்தனை அரச... பிடித்து இரண்டாண்... யதை ஒட்டி அதனைக்... கும்முகமாக நடைபெ... டத்தில் பேசுகையில்... பா. எம். பி. திரு. சி... வேலுப்பிள்ளை கூறின...

திரு. அப்பையா... யில் நடைபெற்ற இக்... தில் அவர் மேலும்... யில் கூறியதாவது:-

'இன்று இந்நாட்டி... கள மக்களுக்கே பல... கள் இல்லை. சிங்கள வ... கட்குவேலைவாய்ப்புகள்...

## புதிய அர... சிறுபான...

பருத்தித்துறை. ...
''சோல்பரி அரசியல்... டமோ அன்றி அதற்... பட்ட திட்டங்களோ... க்காத தன்னாதிக்கத்தை... இறைமையையும், புதி... யரசுத்திட்டம் கொடு... ளது. ஈழத்தின் பிரதா... சியற் கட்சிகள் இல... கள் தவிர்த்து, முழு... யல் திட்டத்தையும்... கொண்டுள்ளன. ... குடியரசு அரசியல் தி... குறைபாடுகள் அற்ற... வில்லை.''

இவ்வாறு நெல்லிய... திய மகாவித்தியாலய... யியல் மன்ற ஆதரவில்... பெற்ற கருத்தரங்கில்... யாற்றிய பேராதனை... கலைக்கழகப் பொருள... அரசியல் விரிவுரை... திரு. அ. சிவராசா கூ...

மன்றத் தலைவர் தி... கனகேந்திரம் தலைமை... னார்.

தொடர்ந்து பேசிய... சிவராசா குறிப்பிட்... வது:-

''ஓர் அரசியல் திட்ட... நாட்டு மக்களின் பா... யங்களையும் அபிலாசை... யும் பிரதிபலிக்கும் நிலை... ணடியாக அமையவேண்... ஆனால் சிறுபான்மையி... அபிலாஷைகளை அலட்... செய்யும் ஓர் அரசியல்... டம் ஜனநாயகக் கோட்... களின்படி, ஒரு தே... தன்னமவாய்ந்த அ... திட்டமாக அமையமுடி... பௌத்த மதத்திற்கும்,...

## உற்சவம்

யாழ்ப்பாணம், செவ்...
புங்குடுதீவு வல்லன்... பெருந்துறை ஸ்ரீ நாக... ரான் தேவஸ்தான அல... உற்சவம் இம்மாதம்... திகதி ஆரம்பமாகி... திகதி முடிவடையவுள்ள...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ஸ்தான்

# ...ந்தியபேச்சை நிறுத்தியது: பிரிட்டன் கவலை

லண்டன், ஜூன். 10
...தியாவுடனான சகல
...முறையிலான பேச்சுக்
...கைவிட்டுவிடுவதென்ற
...ஸ்தானின் முடிவுகுறித்து
...டிஷ் வெளிறவு ஸ்டேட்
...ச்சர் கவலை தெரிவித்
...ார்.
...ஸ்தான் இப்பேசுக்களை
...விடுவதனால் அதற்கு
...தேத்திலும் பயன் ஏற்
... போவதில்லை என்று
...வித்த அவர், இந்திய

துணைக்கண்டத்தின் பொது நன்மைக் கருதி பாகிஸ்தான் பேச்சுக்களை உடன் நடத்த வேண்டும் என்றும் கூறினார்.

பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் ஜுைப் அஸிஸ் அகமட் விரைவில் பிரிட்டனுக்கு வருவார் என்றும் அங்கு வரும்போது அவரிடம் இந்தியாவுடன் பேச்சுக்களை நடத்தும்படி தாம் கேட்பதற்கு எண்ணியுள்ளதாகவும் வெளியுறவு மந்திரி கூறினார்.

# 'அவர்களுக்கே இல்லை; எமக்கா கிடைக்கும்?''

— கோப்பாய் எம். பி.

...மாவிட்டபுரம், திங்கள்
...ரும்பான்மையினமான
... இனத்தின் அபிலா
...ளையே நிறைவேற்றமுடி
...அரசாங்கம் எமது உரி
...ா வழங்கும் என எதிர்
...முடியாது.'
...வாறு அளவெட்டி தவ
...ரி முத்துமாரியம்மன்
... முன்றலில் கனிஞர்
...னந்தனை அரசு சிறை
... இரண்டாண்டு ஆகி
...ட்டி அதனைக் கண்டிக்
...மாக நடைபெற்ற கூட்
... பேசுகையில் கோப்
...ம். பி. திரு. சி. கதிர
...பிள்ளை கூறினார்.
... அப்பையா தலைமை
...டபெற்ற இக் கூட்டத்
...வர் மேலும் பேசுகை
...ியதாவது:-
...று இந் நாட்டிலே சிங்
...களுக்கே பல உரிமை
...ல்லை. சிங்கள வாலிபர்
...லைவாய்ப்புகள் இல்லை.

வேலைவாய்ப்புக் கிடைக்காத சிங்கள வாலிபர்கள் அரசுக்கு எதிராக கிளர்ச்சி நடத்தியும் இருக்கிறார்கள். ஆளும் சிங்கள இனத்தையே வாழ வைக்கமுடியாத அரசு ஆளப்படும் தமிழினத்தை எப்படி வாழவைக்க முடியும்? இதை தமிழ்மக்கள் உணர வேண்டும்.'

தமிழர் கூட்டணிச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம், முன்னாள் செனட்டர் சு. நடராசா, திருமதி அமிர்தலிங்கம், திரு. ஆலாலசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினர்.

வழக்கறிஞர் மு. திருநாவுக்கரசு தலைமையில் கவியரங்கு ஒன்றும் இடம் பெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் அண்மையில் காலமான உரும்பராய் வாலியர் சிவகுமாரனின் ஆத்மா சாந்தியடைய இரு நிமிடநேர மௌனப்பிரார்த்தனை நடைபெற்றது.

# ...ய அரசியல் அமைப்பும் சிறுபான்மையினரும்

...ந்தித்துறை, திங்கள்
...ல்பரி அரசியல் திட்
... அன்றி அதற்கு முற்
...திட்டங்களோ கொடு
...தன்னுதிக்கத்தையும்
...மையையும், புதிய குடி
...திட்டம் கொடுத்துள்
...ழத்தின் பிரதான அர
...ட்சிகள் இல சரத்து
...ர்த்து, முழு அரசி
...ட்டத்தையும் ஏற்றுக்
...டுள்ளன. எனினும்
... அரசியல் திட்டம்
...ாடுகள் அற்று மிளிர
...
...ாறு நெல்லியடி மத்
...காவித்தியாலயப் புவி
...மன்ற ஆதரவில் நடை
... கருத்தரங்கில் உரை
... பேராதனைப் பல்
...ழகப் பொருளாதார
...ல் விரிவுரையாளர்
...ு. சிவராசா கூறினார்.
...த் தலைவர் திரு க.
...ந்திரம் தலைமைதாங்கி
...
...டர்ந்து பேசிய திரு.
...ா குறிப்பிட்டதா
...
... அரசியல் திட்டம் அத்
... மக்களின் பாரம்பரி
...யும் அபிலாஷைகளை
...திபலிக்கும் நிலைக்கண்
...க அமையவேண்டும்.
... சிறுபான்மையினரின்
...ஷைகளை அலட்சியம்
...ம் ஓர் அரசியல் திட்
...நாயகக் கோட்பாடு
...டி, ஒரு தேசியத்
...வாய்ந்த அரசியல்
...ாக அமையமுடியாது.
...க மதத்திற்கும், சிங்

களமொழிக்கும் பிரத்தியேக முக்கியத்துவம் அளிக்கும் ஓர் அரசியல் திட்டம் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள், மதங்கள், கலை கலாச்சாரப் பாரம்பரியங்கள் நிலவும் ஒரு நாட்டிற்குப் பொருத்தமானதா என்பது சிந்தனைக்குரிய விடயம்.

அடுத்துப் பேசிய இலங்கைப் பல்கலைக்கழகப் புவியியல் விரிவுரையாளர் கலாநிதி பீ. பாலசுந்தரம்பிள்ளை கூறியதாவது:-

''பல்கிப் பெருகிவரும்சனத்தொகைப் பெருக்கமே இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு மூல காரணமாகும். சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்றவாறு பொருளாதாரமும் விரிவடையுமாயின் பிரச்னைகள் எழமுடியாது. ஆனால் இலங்கையில் கைத்தொழில், விவசாய, தொழில்நுட்ப அபிவிருத்தி குறிப்பிடக்கூடியளவு வளர்ச்சியடையவில்லை. மக்களின் சராசரி மாதாந்த வருமானம் மிகக்குறைந்தபடியில் உள்ளது.''

வித்தியோதயப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி கா. சிவத்தம்பி பேசியதாவது: ''கடந்த கால் நூற்றுண்டு கால தமிழ்ச் சிறுகதை நாவலின் போக்கு, இந்திய விடுதலைப் போராட்டகால இலக்கிய நடைப்போக்கினின்றும் வேறுபட்டு அமைந்துள்ளது. பெண்களை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட சிறுகதை, நாவல்கள் இக்காலப் பகுதியில் பெருமளவு வெளியிடப்பட்டுள்ளன. இந்திய தி. மு. க.வின் இனவாதம், தமிழ் இலக்கியத்தில் பிரதிபலிக்கிறது. ஆனால் இலங்கையைப் பொறுத்தமட்டில் 1956-ம் ஆண்டுக்குப்பின் தேசிய இன ஒற்றுமை, ஐக்கியம்,

## ...உற்சவம்

...ப்பாணம், செவ்வாய்
...டுதீவு வல்லன் திருப்
...துறை ஸ்ரீ நாகதம்பி
...தவஸ்தான அலங்கார
...ம் இம்மாதம் 16 ந்
...ஆரம்பமாகி 27 ந்
...டிவடையவுள்ளது
(த-ஈ)

# செய்தித் திரட்டு

சேக்கிழார் இயற்றியபெரிய புராணத்தை ஆங்கிலத்திலே திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் மொழி பெயர்த்து வருகிறார். கோவை திரு. என். மகாலிங்கம் ஆரம்பித்துள்ள இந்த சைவப்பணி கால்வாசிக்கு மேல் முடிந்துள்ளது. சமீபத்தில் குன்றத்தூரில் சேக்கிழார் குருபூசை நடைபெற்ற போது அவரது விக்கிரகத்தின் முன்பாக இந்த மொழி பெயர்ப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

தமிழ்நாட்டிலே சிவபுரம் கோயிலிலிருந்து களவாடப்பட்ட நடராஜமூர்த்தியின் அழகான விக்கிரகத்தை அமெரிக்காவிலே இரு வாரங்களுக்குமுன் டெலிவிஷன் மூலம் லட்சக்கணக்கானவர்கள் தரிசித்தனர். இந்த விக்கிரகத்தை சைமன் என்ற ஓர் அமெரிக்க தொழில் அதிபர் 75 லட்ச ரூபாய் விலைக்கு வாங்கினார். இதைப் பழைய கோயிலுக்கே சேர்க்க வாஷிங்டனிலுள்ள இந்திய தூதராலயம் முயற்சித்து வருவதாகவும் ஒரு சமரசம் காண அத்தொழிலதிபரும் ஆவல் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. நியூயோர்க் நகரிலுள்ள புகழ்பெற்ற மியூஸியத்தார் களவாடப்பட்ட இந்த விக்கிரகத்தை கண்காட்சியில் வைக்க மறுத்துவிட்டது, சைமனுக்கு ஏமாற்றமென்றும் இத்தடையை நீக்க அவர் முயன்றுவருவதாகவும் கூறப்படுகிறது.

ஃ ஃ ஃ

பிரான்ஸிலுள்ள பெண்கள் விடுதலை இயக்கத்தார், இம்மாதம் 8, 9 திகதிகளில் பெண்கள் யாரும் வீட்டுவேலைகளைச் செய்யக்கூடாதென்றும் ஆண்களுடன் உடல்உறவு கொள்ளவும் மறுத்துவிட வேண்டுமென்றும் கேட்டிருந்தனர். சுமார் 3 கோடி பிரெஞ்சுப் பெண்கள் இந்த 'வேலைநிறுத்தத்தில்' ஈடுபடக் கேட்கப்பட்டிருந்தனர்.

ஃ ஃ ஃ

தஞ்சாவூரிலே ஒரு பெண் குரங்கு ஒரு சிறிய அணில் பிள்ளையை தன் செல்வக் குழந்தைபோல் அன்புகாட்டி வளர்த்து வருகிறது. தன் கையில் அதை வைத்து விளையாடிவருவதை பலர் வந்து பார்க்கின்றனர். 'குழந்தை'க்கு யாரும் பழம் அல்லது கடலை கொடுத்தால் அதை அக்குரங்கு முதலில் தன் வாயில் போட்டு மென்று மெதுபடுத்தி 'அக்குழந்தை'க்குச் சாப்பிடக் கொடுக்கிறது.

ஃ ஃ ஃ

இன்று உலகின் பல பிரச்னைகளுக்கும் ஆன்மீகமூலமே தீர்வுகாண முடியுமென்பதை பலரும் உணர்ந்து வருவதாகவும் காஞ்சி காமகோடி ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகளின் புனிதவாழ்க்கை பல மக்களுக்கும் ஆன்மீகத்தில் வழிகாட்டுவதாக இருப்பதாகவும் இந்திய உபதலைவர் ஜி. எஸ். பதக் சென்னையில் நடைபெற்ற சுவாமிஜியின் 81வது ஜெயந்திவிழாவன்று நடைபெற்ற கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். இந்த வாழ்க்கையிலே ஜீவன்முக்தி அடையலாமென்பதற்கு அவர் ஓர் உதாரணமென்றார். திரு. ம. பொ. சிவஞானகிராமணியார் பேசுகையில் நாட்டில் ஆன்மீக ஒருமைப்பாட்டை அத்துவைதமூலம் ஆதிசங்கரின்

ஆகியவற்றைக் கருவூலமாகக் கொண்ட இலக்கியப்படைப்புகள் தோன்றியுள்ளன.''

செயலாளர் ... ஜெயராசா நன்றி கூறினார்.
(ஈ)

# 1973ம் ஆண்டு 44ம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 283-ம் பிரிவின்கீழ் மரணச் சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்குவதற்கான இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்.

யாழ்ப்பாணம், கோண்டாவிலைச் சேர்ந்த காலம் சென்ற வேலுப்பிள்ளை விஜசித்தம்பியின் மரணச் சாதனமெழுதாத ஆதனங்களும் மற்றும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்டவை.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
வழக்கு இல: 3003/ரி

வேலுப்பிள்ளை விஜசித்தப்பி ஏகம்பெண் மங்கையர்க்கரசி
கோண்டாவில்.
விண்ணப்பக்காரர்.

1973ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11-ம் திகதியைக் கொண்ட விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முக்கியமான உறுதிக் கூற்றுகள் பார்த்த மாத்திரத்தில் நிருபிக்கப்பட்டதெனத் திருப்தியடைந்ததின்பேரில் மேலதிகப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் எம். ஏ. எல்லப்பொல ஆகிய நான் இக் கட்டளையின் அறிவித்தலைப் பெற்ற எவராவது அல்லது வேறு எவராவது 1974-ம் ஆண்டு ஆனி மாதம் 20-ம் திகதி அல்லது அதற்கு முன் தகுந்த காரணம் காட்டி ஆட்சேபம் தெரிவித்தாலன்றி

மேற்சொல்லப்பட்ட காலம் சென்றவர் 1972ம் ஆண்டு வைகாசி மாதம் 22ம் திகதி நொத்தாரிஸ் அ. சுப்பிரமணியம் முகதாவில் 10671ம் இலக்கத்தில் எழுதப்பட்டு இவ்வழக்கில் அணைக்கப்பட்ட மரணச் சாதனத்தை ஏற்றுக்கொண்டு அம்மரணச் சாதனத்தில் நியமிக்கப்பட்டபடி நிருவாகத் தத்துவப் பத்திரம் பெறுவதற்கு மேற்சொல்லப்பட்ட விண்ணப்பக்காரரே உரித்துடையவர் என்றும் அவ்வண்ணமே அவருக்கு நிருவாகத்தத்துவப் பத்திரம் வழங்கப்படுகிறதென்றும் இத்தால் கட்டளையிடுகிறேன்.

(ஒப்பம்)
சோ. இராசநாதன்
பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளருக்காக.

1974ம் ஆண்டு ஆனி மாதம் 5-ம் திகதி. 75

அடிச்சுவட்டில் அவர் செய்துவருவதாகக் கூறினார். காஞ்சிபுரத்துக்குப் பக்கத்திலுள்ள தேனம் பாக்கம் கிராமத்திலுள்ள பெரியவாளை பல்லாயிரக்கணக்கானவர்கள் சென்று தரிசித்து வணங்கி ஆசி பெற்றனர்.

0 0 0

இனிப்புப் பண்டங்கள் மூளைவேலையை அதிகரிக்கச் செய்ய உதவுவதாகவும், காய்கறிகள் உண்பது யோசனைசக்தியை குறைக்கலாமென்று அமெரிக்க ஆராய்ச்சி நிலையம் அறிவிக்கின்றது.

0 0 0

தமிழகத்திலே அங்கவீனர்களின் நிவாரணத்துக்காக முதலமைச்சர் கருணாநிதி தமது 51-வது பிறந்த நாளன்று சேமித்த நிதிக்கு 15 லட்ச ரூபாய் சேர்ந்துள்ளது. கோவில் நிதியில் இருந்து 5 லட்சமும், பஸ் ஸ்தாபனத்திலிருந்து 1 லட்சமும் இதற்கு உதவப்பட்... ...வீனர்கள் முதலமைச்சரை நேரில் கண்டுவாழ்த்தினர்.

# 1973-ம் ஆண்டு 44-ம் இலக்க நீதி நிருவாக சட்டத்தின் 283-ம் பிரிவின் கீழ் மரணச்சொத்து நிருவாகத்தத்துவப் பத்திரம் வழங்குவதற்கான இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்,

யாழ்ப்பாணம் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சரவணமுத்து நடராஜாவின் மரணச் சாதனமெழுதாதஆதனங்களும் மற்றும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்டவை.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

வழக்கு இல: 3018/ரி

சரவணமுத்து நடராஜா ஏகம்பெண் மலர்மணி, உரும்பராய் தெற்கு.
விண்ணப்பக்காரர்
எதிராக

1. நடராசா மகள் புஸ்பதேவி,
2. நடராஜா மகள் இந்திராணி.
3. நடராஜா மகள் ஜெயராணி.
4. நடராஜா சிறி கணேசன்.
5. நடராஜா மோகன்,
6. நடராஜா சந்திரக்குமார்,
7. நடராஜா மகள் சிவமலர்.
8. நடராஜா மகள் ஜெயகுமாரி.

இவர்கள் யாபேரும் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பராயமற்றவர்களானபடியால் 9-ம் பிரதிவாதியை தமது பாதுகாவலராகக் கொண்டு வெளிப்படுகின்றார்கள்.

9. சரவணமுத்து சுப்பிரமணியம் அளவெட்டி வடக்கு, இவர் 1-ம், 2-ம், 3-ம், 4-ம், 5-ம், 6-ம் 7-ம், 8-ம் பராயமற்ற பிரதிவாதிகளின் பாதுகாவலராக வெளிப்படுகின்றார்.

1973-ம் ஆண்டு மார்கழி மாதம் 5-ம் திகதியைக் கொண்ட விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முக்கியமான உறுதிக் கூற்றுகள் பார்த்த மாத்திரத்தில் நிருபிக்கப்பட்டதெனத் திருப்தியடைந்ததின் பேரில் மேலதிகப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் எம். ஏ. எல்லப்பொல ஆகிய நான் இக் கட்டளையின் அறிவித்தலைப் பெற்ற எவராவது அல்லது வேறு எவராவது 1974-ம் ஆண்டு ஆனி மாதம் 20-ம் திகதி அல்லது அதற்கு முன் தகுந்த காரணம் காட்டி ஆட்சேபம் தெரிவித்தாலன்றி

(அ) மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச் சென்ற மரண சாதனமெழுதப்படாத சொத்துக்களுக்கும் மற்றும் பெறுமதிகளுக்கும் நிருவாகத்தத்துவ பத்திரம் பெறுவதற்கு மேற்சொல்லப்பட்ட விண்ணப்பக்காரரே மேற்சொல்லப்பட்ட வழி உருத்தாளர் என்ற வகையில் உரித்துடையவர் என்றும் அவ்வண்ணமே அவருக்கு நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்கப்படுகின்றதென்றும். மேலும்,

(ஆ) இம்மரணச் சொத்து நடவடிக்கை சார்பாக மேற்கூறப்பட்ட 9-ம் பிரதிவாதியை பராயமற்றவர்களான 1-ம், 2-ம், [illegible]-ம், [illegible]-ம், 5-ம். 6-ம் 7-ம், 8-ம் பிரதிவாதிகளின் பாதுகாவலராகவும் நியமிக்கப்படுகின்றார் என்றும் இத்தால் கட்டளையிடுகிறேன்.

(ஒப்பம்)
சோ. இராசநாத...
பகிரங்க ...
பொ...
197... ...மாகழி
5-ம் ... 76

# சிறு விளம்பரம்

## நன்றி நவிலல்

6-6-74 ல் நடைபெற்ற எமது திருமண விழாவிற்கு வருகைதந்து, வாழ்த்துக்கள் அனுப்பி பரிசில்கள் வழங்கிய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சபாநாதன் தம்பதிகள், செட்டியாமடம், வட்டுக்கோட்டை. 256

## விற்பனைக்கு

டீசல் லைட் மெசின் 1500 வாட்ஸ் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். இல: 65, ஜின்னுரோட், யாழ்ப்பாணம். 255

எங்களிடம் எல்லாவிதமான மரக்கறிவிதைகள், உரவகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். ரீ. சண்முகநாதன் அன்கோ, 134, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன் No. 7181. 130

## சேவை

வைத்தியசாலைகட்கும் வர்த்தக, தொழில் ஸ்தாபனங்கட்கும் உகந்த நம்பிக்கையான பலதரப்பட்ட பணியாட்கள் எம்மிடம் பதிவு செய்திருக்கிறார்கள். தேவையானோர் எம்மை அணுகவும். ஆலோசியுங்கள். கற்பகத்தரு, 136, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 203

## முயற்சி

உடுப்பிட்டி, திங்கள் வல்லிபுரக் கடற்கரையில் கண்ணாடித் தொழிற்சாலையொன்று நிறுவுவது சம்பந்தமான முயற்சியில் வடமராட்சி மித்திரன் இளைஞர் கழகம் ஈடுபட்டுள்ளது (ஈ)

# உபதபால் அதிபர்கள் கோரிக்கைகள்

யாழ்ப்பாணம், செவ்வா...

''பிரித்தானிய காலனி ஆட்சிக்காலத்தின்போது 1920-ம் ஆண்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட உப-அஞ்சல் அதிபர்களின் சேவைத்திட்டம் இன்றுவரை எதுவித மாற்றமும் இன்றி செயல்பட்டு வருகின்றது. காலனியல் காலத்தில் உப அஞ்சல் அதிபர்கள் பகுதிநேர ஊழியர்களாகவே கடமையாற்றினர். அஞ்சல் நிலையத்தில் உதவியாளரொருவரை அமர்த்திவிட்டு வேறு தொழில்களைச் செய்தனர். இன்று முழுநேர ஊழியர்களாகவே கடமையாற்ற வேண்டிய நிலையில் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.''

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா உப அஞ்சல் அதிபர்கள் சங்க முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் திரு. க. இராஜசிங்கம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

அஞ்சல் பரிசோதகர் திரு. ஏ. சி. கந்தசாமி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

திரு. இராஜசிங்கம் தொடர்ந்து கூறியதாவது: காலத்திற்கு ஏற்றமுறையில் எமது சேவைத்திட்டம் மாற்றி அமைக்கப்படவேண்டும். ஏனைய தொழிலாளர்களுக்கு உள்ளது போன்று எமக்குச் சேமலாப நிதிகூட இல்லை. பொருளாதார நெருக்கடி மலிந்துள்ள இந்நிலையில் எமது குடும்பத்திற்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை. எமது கோரிக்கைகளை அரசினர் அலட்சியம் செய்து நிராகரிப்பது ஏன் என்று தெரியவில்லை.

''சேவை நிபந்தனையின் படி பகுதி வேலையாளர்கள் என்ற அடிப்படையில் எமது கோரிக்கைகள் தட்டிக்கழிக்கப்பட்டு வந்துள்ளன. எமது வேலை பொறுப்பு வாய்ந்தது. அதிக... வேலையைச்செய்கிறோம். எமது பொறுப்புக்களை ஆராய்ந்து அரசினர் எமது கோரிக்கைக்குச் செவிசாய்க்க வேண்டும்.'' (ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தன்னடக்கம் ஒருவரின் ஆற்றலை அதிகரிக்கிறது தன்னடக்கமுள்ள மனிதன் பாவமற்றவனும்பயமற்ற. வனுமாகிப் பெருங்குணங்கள் ஈட்டுகிறான்.

—சுவாமி சிவானந்தர்

# ஈழநாடு

(11—6—74)

## ஒரு நல்ல ஸ்தாபனம்

மட்டக்களப்பிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண குருகுலம் திக்கற்ற குழந்தைகளுக்குச் செய்துவரும் அரும்பணி போற்றத்தக்கதுடன், அது நல்லதோர் முன்மாதிரியாக வளர்ந்தோங்கி வருவதுமகிழ்ச்சிக்குரியதாகும்.

சென்ற வாரம், இந்த நல்ல ஸ்தாபனத்தின் 48-வது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. மாவட்ட நீதிபதி திரு. சண்முகலிங்கம், அங்கு நடைபெறும் சிறந்த தொண்டுகளைப் பாராட்டிப் பேசுகையில், தோல்வி கூட நன்மைக்கே என்றும் சென்ற உலக மாகயுத்தத்தில் தோல்வியுற்ற ஜெர்மனியும், ஜப்பானும் இன்று உலகிலேயே பொருளாதாரத்தில் வெற்றி பெற்று முன்னணியில் நிற்பதாகவும், அதுபோல இந்த குருகுலத்தில் பயிலும் மாணவர்கள் தாங்கள் பெற்றோர்களை இழந்ததும் கூட ஒரு நன்மைக்கே என்றும், இல்லாவிடில் அவர்கள் இவ்வித அரிய ஸ்தாபனத்தில் சேர்ந்து வாழ்க்கைக்கு வேண்டிய நல்ல பயிற்சியைப் பெற முடியாது போயிருக்கலாமென்றும் கூறினார்கள்.

மாணவர் இல்லங்கள் நாட்டில் எவ்வளவோ உள்ளன. உதாரணமாக பல்கலைக்கழக மாணவர் இல்லங்களில் நாம் காண்பது என்ன? மிகக் கீழ்த்தரமான முறையிலே அங்கு ''ருக்கிங்'' நடப்பது முதல் வெடிகுண்டுகளைச் செய்து நாட்டின் அமைதியைகெடுக்கக் கூடிய ஆபத்தான காரியங்கள் வரை நடந்து வருவது பற்றி யார் தான் நிம்மதி கொள்ள முடியும்.?

நல்ல வேளையாக, இன்னும்நம் பிக்கையுள்ள தென்பதற்கு, ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் குருகுலம், ஒரு நல்ல அறிகுறி. கற்றதனால் ஆய பயனை மாணவர்கள் பெறத்தக்கமுறையில் அவர்களைத் தெய்வீக வழியில் ஒழுக்கத்துடன் வாழ்க்கை நடத்துவதற்கு மேலான பயிற்சியைசுவாமிஜீவானந்தா அவர்கள் அளித்துவருகின்றார்கள். அங்கு ஒருமுறை சென்றுபார்ப்பின், அதன் சிறப்பை அறியலாம்.

இந்த ஸ்தாபனம் இன்னும் இரண்டுவருடங்களில் பொன்விழா நடத்த இருக்கின்றது. சுவாமி பல நல்ல திட்டங்களை வகுத்திருக்கின்றார்கள் பொதுமக்கள் கூடிய ஆதரவை இதற்கு அளிப்பது நாட்டுக்கும் தங்களுக்கும் மேலான நன்மை செய்து கொள்ளுவதாகும்.

## கல்யாண மண்டபம்

விவாகங்கள் நிரம்பிய இவ்வைகாசி மாதத்தில் யாழ்ப்பாணத்தின் ஒரு பெருங் குறையைப்பற்றிப் பேசுபவர் பலர். அது கல்யாண மண்டபமென்பதில் கருத்து வேற்றுமை இருக்க மாட்டாது.

கல்யாண வைபவங்களில் வீண் செலவுசெய்து குட்டிச்சுவராகும் பல வசதியற்ற குடும்பங்களுக்கு பொதுமண்டபம் ஒரு வரப்பிரசாதமாகும்.

இத்தேவையை இன்று ஓரளவிற்குப் பூர்த்தி செய்வன சைவஆலயங்களே. அங்கு விவாக வைபவங்கள் நிகழ்வதுபற்றி அபிப்பிராயபேதங்கள் அடிபடுகின்றன. இதை விரும்பாதவர் கூறும் நியாயங்களில் உண்மையில்லாமலில்லை. திருமணம் சமயவிழா மட்டுமல்ல, சமூக வைபவமுமாகையால் பொதுமண்டபமொன்று அவசியமாகின்றது.

எனவே யாழ்ப்பாணத்தில் நல்லூரில் நிறுவப்படும் கல்யாண மண்டபத்தை மக்கள் நிச்சயமாக வரவேற்பார்கள். இம் முயற்சியில் முன்னிற்கும் யாழ். மாநகரசபைக்கு மக்கள் வேண்டிய ஒத்துழைப்பு நல்குவரென்பதில் சந்தேகமில்லை.

## ஆசிரியர்களுக்கு குறுகிய கால லீவு தேவை

பருத்தித்துறை, திங்கள் ''1971-ம்ஆண்டுக்கு முன்பிருந்தது போல சகல ஆசிரியருக்குப்குறுகியகால லீவுவழங்கப்படல் வேண்டும்'' என்று கோரும் தீர்மானம் கடந்த சனிக்கிழமை நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில்நடைபெற்றவடமாகாண ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதரதீர்மானங்கள் வருமாறு:-

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும் ஒரு நேரப்பாடசாலைகளாக இயங்க வேண்டும்.

சம்பள முரண்பாட்டுக் கமிஷனால் சிபார்சு செய்யப்பட்ட சம்பள உயர்வும் பாக்கிப்பணமும் இலங்கை பல்கலைக்கழக தமிழ் டிப்ளோமாப் பட்டம்பெற்ற ஆசிரியருக்கு உடனடியாக வழங்கப்படல் வேண்டும்.

தொழில்நிர்வாகம்போன்ற பயிற்சி நெறிகள் சகல பல்கலைக்கழகங்களிலும் தமிழ் மொழி மூலம் கற்பிக்கப்படல் வேண்டும்.

தபால்மூலம் கல்வித்தகுதித் தேர்வுப்பயிற்சி பெறும் ஆசிரியருக்கும் கல்வி முன்னேற்றம் காரணமாக எடுக்கும்இறுதிப் பரீட்சைக்கு முன் இரண்டு மாதப் படிப்பு லீவு வழங்க வேண்டும்.

ஆசிரியர்களுக்காய உயர் பதவிகளுக்கு எழுத்துத் தேர்வு வைக்கும் அதே வேளையில் பரீட்சார்த்திகள் தேர்வில் பெற்ற புள்ளிகளின் பட்டியலை வெளியிட வேண்டுமென்றும் மீள்பார்வை கோரும்உரிமையும் அளிக்கப்பட வேண்டுமென்றும் இச் சபை கோருகிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்க[illegible] 1974-ம் ஆண்டு ஜூன் மாதம் 11-ந் திகதி [illegible]
The Eelanadu P. O. Box No [illegible]
"Eelanadu" Telephone [illegible]

### முள்ளியவளை

'வன்னிநாடு, முக்கியமாக இந்த முல்லைத்தீவுப்பகுதி நீர்வளம், நலவளம்நிறைந்த நாடு. இங்கு வாழுபவர்கள் பிறருடைய தயவை ஒருபோதும் நாடியதில்லை. எப்பொழுதும் சுதந்திர புருஷர்களாய் வாழ்ந்தவர்கள். ஆகையினால்தான் இப்பகுதிக்கு இப்பவும் 'அடங்காப்பற்று' என்று பெயரிருக்கிறது. இங்குதான் தமிழர் முதன்முதலில் குடியேறி ராஜ்யங்களையும் அமைத்தார்கள். வெள்ளைக்கார அரசாங்கங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுடைய சுதந்திரத்தைபறித்துக்கொண்டார்கள். அவர்களுடைய பலம் குறையபோதிலும் பெருமையும் வீரமும் அவர்களை விட்டகலவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒல்லாந்தரும் பின்பு ஆங்கிலேயரும் சிறந்த கல்வி நிலையங்களை அமைத்தார்கள். அரசபாஷை தெரிந்தவர்களுக்கு அரச உத்தியோகங்களை அளித்தார்கள். கல்விபயிலவேண்டுமென்ற ஆர்வத்தினாலும் உத்தியோகம்பார்க்கவேண்டுமென்ற ஆசையினாலும் தூண்டப்பெற்ற வன்னிநாட்டவர், யாழ்ப்பாணத்தில் போய்க் குடியேறினார்கள். இதுதான் நடந்தசங்கதி'.

இப்படி திரு. நடனசபாபதி விளங்கப்படுத்தினார்

இந்த வியாக்கியானம் சரியோ பிழையோ எனக்குத் தெரியாது. ஆனால் நிலவளத்தைப் பொறுத்தவரையில் வன்னிநாட்டின் முல்லைத்தீவுப் பகுதியாழ்ப்பாணக்குடாநாட்டின் பெரும்பகுதியைக் காட்டிலும்பன்மடங்கு சிறந்ததென்பதேஎனதுஅபிப்பிராயம். மா, பலா, வேம்பு, கமுகு, தென்னை வாழை முதலிய பயனுள்ள மரங்கள் முதிரை, பாலை முதலிய வன விருட்சங்களுடன் முட்டி மோதிக்கொண்டு வானுற வளர்ந்து பார்த்த இடமெங்கும் பசுமலர்சோலையாகக் காட்சிதருகிறது களனிகளில் நெல்லும் தானியங்களும் வருடம் முழுவதும் விளைகிறது. கால்நடைகள் வீட்டுக்குவீடு பட்டி பட்டியாய் நிற்கின்றன. காய்கறிகளுக்கும் குறைவில்லை, வன்னி நாட்டவர் குடிபெயர்ந்துவேற்றூருக்குப் போகவேண்டிய அவசியமில்லை.

இந்த அழகுகளுக்கெல்லாம் ஒரு சின்னமாகவிளங்குகின்றது முள்ளியவளை கிராமம். இதுவும் இங்கிருந்து முல்லைத்தீவு பட்டினத்துக்கு செல்லும் பாதையில் ஒரு மைல் தள்ளி இருக்கும் தனியூற்று என்ற கிராமமும் சேர்ந்து ஓர் அழகிய சிறு பட்டினம்போல இருக்கின்றன. சந்தை, பள்ளிக்கூடம், தபாற்கந்தோர், வைத்தியசாலை, விளையாட்டுமைதானம் எல்லாம் இருக்கின்றன. இங்கு வசிப்பவர்கள் பெரும்பாலும் இந்த மண்ணிலேயே பிறந்தவர்கள் உத்தியோகம் வியாபாரம், கமம் தொடர்பாக யாழ்ப்பாணத்திலிருந்து குடியேறியவர்களும் இருக்கிறார்கள்.

வற்றாப்பளைப் பொங்கலுக்கு இரண்டுநாள் முந்தியும் இரண்டு நாள் பிந்தியும் இந்த முள்ளியவளை - தனியூற்று பட்டினம் ஒரு பெரும் நகரமாய்விடும். வான்களும், பஸ்களும், லொறிகளும், ட்ராக்டர்களும் ஆயிரக்கணக்கான அடியார்களைக் கொண்டுவருவதும் போவதுமாயிருக்கும். அடியார்கள் தனித்தனியாகவும் குடும்பம் குடும்பமாகவும் கூட்டம் கூட்டமாகவும் தலையில் மூட்டை முடிச்சுகளுடன் வீதிகளில் சுற்றித்திரிவார்கள். சில இடங்களில் இவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். தண்ணீர்ப்பந்தல்களுண்டு.

## காட்டு வழி கதிர்காமம்

வி. என். பி.

இந்த சீசனுக்கென்று யாழ்ப்பாணத்திலிருந்து வந்த குடவர்கள் இரண்டு இடங்களில் முகாம்போட்டு மட்பாண்டம் செய்துகொண்டிருந்தார்கள். பொங்கற் பானைகள் சட்டிகளைவிட, கற்பூரம் கொளுத்திவைப்பதற்கு பல சிறு துவாரங்களுள்ள பானைகளையும் வனைவார்கள். கண்ணகையம்மன் ஆதியில் வற்றாப்பளைக்கு வந்தபோது தலையின் பேன்பார்த்துவிடும்படி இருசிறுவரைக் கேட்டதாகவும், அவர்கள் அந்த நரைத்தலையை ஈவிப்பார்த்தபோது தலை முழுவதும் கண்களாய் தெரிந்ததாகவும் ஒரு நம்பிக்கையிருக்கிறது. இதைக் குறிப்பதற்காகவே கண்களுள்ள பானைகள் செய்யப்படுகின்றன. இவை அடுப்புக் சற்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்தும் இதர வட பகுதிகளிலிருந்தும் நடந்துவந்த அடியார்கள் வரும் வழியில் தண்டிக் கொண்டுவந்த அரிசியை இங்குள்ள சில பெருங்குடி மக்களுக்கு விற்றுப்போட்டு, அதே அரிசியை அவர்கள் அன்னதானமாக வழங்க, அதைச் சாப்பிட்டுவிட்டுப் போவார்கள்! பரம்பரை பரம்பரையாகச் சில வீடுகளில் வருகிறவர்கள் போகிறவர்களுக்கெல்லாம்இந்த இரண்டுமூன்று தினங்களும் உணவும் கொடுத்து இராத் தங்கலுக்கும் வசதி செய்வார்கள்.

(தொடரும்)

ஆசிரியருக்கு கடிதம்:

## "போம்பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்"

புண்ணியம் செய்ய வாய்ப்புக் கிடைப்பது அரிது.

நமது இறுதிப் பிரயாணத்தில் எடுத்துச்செல்லத்தக்க ஒரேஒரு பொருள், உடம்போடிருந்த காலத்தில் செய்துவைத்த புண்ணியமேயாம்.

மனத்தூய்மையும் பணமும் படைத்தவர்கள், புண்ணியம் செய்தற்கு ஏற்ற காலத்தை எதிர்பார்த்திருப்பதும், ஏற்ற இடத்தை விசாரிப்பதும் இயல்பு.

எல்லாரும் எல்லா வசதியும் பெறலாமாயின் புண்ணியம் செய்தற்கு வாய்ப்பே இடையாது.

இப்பொழுது, இருந்த இடத்தில் இருந்துகொண்டே எதிர்வரும் ஒவ்வொரு கணத்தையும் எவரும் பயன்படுத்தற்கேற்றதொரு நிலையைக் கடவுள் தந்து பரிசோதனை நடத்துகிறார்.

பட்டினிக்குரல் உலகமெங்கணும் எழுந்து அலை மோதுகின்றது. செவிகளை எரிக்கின்றது! மனம் கொதிக்கின்றது.

தேகவலியும் முயற்சியும் உள்ளவர்கள் ஒருவாறு காலம் கழிக்கின்றார்கள்.

வேறெவ்வகை வருமானமுமின்றித் தேகமுயற்சியை மாத்திரம் நம்பியிருப்பவர்களுக்கு முயற்சி கிடையாதிருந்தால் அவர்கள் கதி என்னும்!! சுருண்டு மடியவேண்டியதே.

தாய்பட்டினியால் காய்ந்து கருவாடாகின்றாள். பச்சைக் குழந்தை வரண்டு சுருளுகின்றது. அவள் முலையிற் கசி[illegible] தற்கும் சந்தோசம் வேண்டும். ஏழைகளின் நிலையைக் கண்ட புண்ணியவான்களான கனவான்கள் - நம்பிக்கைக்குரிய தூயர்கள், ஒரு சபை கூடி ஏழைகளின் பசிப் பிணியை இயன்ற அளவு போக்க முன்வந்திருக்கின்றார்கள் இது யாழ்ப்பாணத்தில் இப்போது நிறுவப்பட்டுள்ள மலையகத் தோட்டத் தொழிலாளர் நிவாரண சபை.

அவர்கள் கையில் ஒப்பிக்கும் ஒவ்வொரு சதமும் ஓமத்திலிடும் ஓமப்பொருளுக்குச் சமமாயிருக்கும். ஓமப்புகை மேலெழுந்து முகிலாய் மாறி வேண்டுமிடங்களில் மழையாய் மாறி நிலத்தை வளம்படுத்தி உயிர்களை உய்விக்கும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

'வறியார்க் கொன்றீவதே ஈகை'
போம்பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்'

பண்டிதமணி

சி. கணபதிப்பிள்ளை

திருநெல்வேலி.

### வாடகைச் சட்டம்

கொழும்பு, திங்கள் 19 உள்ளூராட்சி மன்றங்களில் புதிய வாடகைச் சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளதாக வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் அறிவித்துள்ளார்.

வடமாகாணத்திலுள்ள பட்டினசபைகளில் சுன்னாகம் நெல்லியடி, உரும்பராய், கிளிநொச்சி, பண்டத்தரிப்பு பகுதிகள் இப்புதிய சட்டத்தால் பயன்பெறவுள்ளன

### சமசமாஜிகள்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைகள்எடுக்கப்படாமை என்பன பற்றிக் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் இராஜநாயகம் கந்தசாமி, கயிலாசபிள்ளை கனகநாயகம், துளசிகாமணி இராசையா ஆகியோரும் பேசினர். புதிய உத்தியோகத்தர்கள் வருமாறு:

தலைவர்: வி. பொன்னம்பலம், உபதலைவர்கள்: எம். பீ. சிவகுருநாதன், சு. பசுபதி, செயலாளர்: வே. கந்தசாமி, உதவிச் செயலாளர், ச. வீரசிங்கம், பொருளாளர், க. அம்பலவாணர், உதவிப் பொருளாளர்: நா. கதிரவேலு. (த)

### மரண அறிவித்தல்
### கந்தையா இலட்சுமி

காரைநகர் பாலாவோடையைச் சேர்ந்த திசை வழங்க மாப்பாண முதலிவம்சத்திலுள்ள குழந்தைவேலு கந்தையாவின் மனைவி இலட்சுமி காலமாகி விட்டார். இவர் தீவுப்பகுதி விவசாயப் போதனாசிரியர் சிவக்கொழுந்து, இராசம்மா (ஆசிரியை) ஆகியோரின் தாயாரும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலுள்ள புனிதவதியாரினதும் மாமியாருமாவர். ஈமக்கிரியைகள் இன்று 11-6-74 செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறும்.

79 தகவல்: K. சிவக்கொழுந்து A. I.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org